ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# குறுந்தொகையில் களவு பாடல்கள் வழி புலவர்களின் பெண்மை பற்றிய கருத்தமைவு

முனைவர் பெ.சுபா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
சிந்திக்கல்லூரி, சென்னை-77.
Psuba81@gmail.com

**ஆய்வுநோக்கம்**

*சங்கஇலக்கியத்தில்பெண்ணின்மனஉணர்வுகள், அவர்களின்கருத்தோட்டங்கள், செயல்பாடுகள்போன்றவைபுலவர்களின்வாயிலாகவெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவேபொதுநிலையில்அல்லாமல்தனித்தனியாகஒவ்வொருபுலவர்களின்பாடல்கள்வழிஆராயும்போது, பெண்என்பவள்எதையெல்லாம்செய்தாலோஅதையெல்லாம்ஏன்? எவ்வாறு? எப்படி? எதற்காக? என்றுபுலவர்கள்கருதியுள்ளனர்என்றபுலவர்களின்பெண்மைபற்றியகருத்தமைவுநன்குஅறியப்படும். பொதுவாகஎல்லாப்பாடல்களையும்சேர்த்துஆராயப்படாமல்தனித்தனிப்புலவர்களின்பெண்மைபற்றியகருத்தமைவைஅறிவதுஇன்றியமையாததாகஉள்ளது. அவ்வகையில்ஆராயும்போதுசங்ககாலமகளிரைப்பற்றியபுலவர்களின்சிந்தனைகள் எவ்வாறுஇருந்தனஎன்பதும்அவர்கள்எவ்வாறுவாழவேண்டும்என்றுவழிவகுத்துக் கொடுப்பதாகவும்இருக்கிறது, என்பதைஆராய்ந்துவெளிக்கொண்டுவருவதேஇக்கட்டுரையின்நோக்கமாகஅமைகிறது.*

**முன்னுரை**

*சங்க புலவர்கள் பதிணென்மேற்கணக்கு நூல்களான எட்டுத்தொகை , பத்துப்பாட்டு ஆகிய 18 தொகை நூல்களில் ஒன்றிலோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தொகை நூல்களிலோ அவர்களின் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன . ஔவையார்,கபிலர், பரணர், போன்றோரின் பாடல்கள் பல தொகை நூல்களில் உள்ளன என்பது அனைவரும் அறிந்த ஒன்றே . ஆனால் 18 தொகைநூல்களில் குறுந்தொகை மட்டும் இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அதில் களவு பாடல்கள் வழி புலவர்களின் பெண்மை பற்றிய கருத்ததமைவினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

*சங்க இலக்கியத்தில் குறுந்தொகைகளவுப்பாடல்களில்பெண்மை குறித்த புலவர்களின் கருத்து எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்ந்து வெளிக்கொணர்வதின் ஊடாக , சங்க இலக்கிய காலத்தில் பெண் மீதான கருத்து எவ்வாறு அமைந்திருந்தது என்பது புலனாகும்.*

**பெண்-பெண்மை - விளக்கம்**

ஐம்பாலுள் ஆண்பால் பெண்பால் அடங்கும். பெண்பால் பெண்ணைக் குறிப்பதாகும். பெண் என்பவள் எத்தகைய இயல்புடையவளாக இருத்தல் வேண்டும் என்ற வரையறையே பெண்மை ஆகும். பெண்மை என்பதற்கு அகராதிகளும் அறிஞர்களும் தம் நிலைபேற்றினை எடுத்துரைத்துள்ளனர்.

பெண்மை என்பதற்கு அகராதியும், களஞ்சியங்களும் பல பொருண்மையைத் தருகின்றன. பெண்மை என்றால் பொதுவாகப் பெண்களிடம் இயல்பாக நம்பப்படும் மென்மை, நளினம் போன்ற இயல்புகள் என்றும் கற்பு என்றும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும்; நிறை, சார்ந்த நிலை என்று திருமகள் அகராதியும்; பெண் தன்மை, நிறை, பெண்ணுக்குரிய நலம், பெண் பிறப்பு, பெண் இன்பம், அமைதீத் தன்மை என்று கழகத் தமிழ் பேரகராதியும்; பெண்மை - பெண்டன்மை, மாட்சிமை என்று தமிழ் மொழி அகராதியும்; பெண்டன்மை, மாட்சிமை, அமைதீத்தன்மை என்று வெள்ளிவிழா தமிழ்ப்பேரகராதியும்; பெண் தன்மை, மாட்சிமை என்று யாழ்ப்பாண அகராதியும் விளக்கமளிக்கின்றன. மேலும் சிலஇலக்கியங்களில் பெண்மை சொல்லாடல்கள் பயன்பாட்டினையும் நாம் அறியமுடிகிறது. காணியைப் பெண்மைக்கெல்லாம் (கம்பர, மீட்சி. 46). பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉம் (கலித். 147). பெண்ணின்பம் பிறனியலாள் பெண்மை நயவாதவன் (குறள்.147). அமைதித்தன்மை பெண்மை நான் வனப்புச் சாயல் (சீவக. 356), பிறையெனு றுதலவன் பெண்மையெனப்படும் (கம்பரா, மிதிலைப். 40), என்பனவாகப் பெண்மைக்கு விளக்கங்கள் காணமுடிகிறது. மேலும் பலர் பெண்மை என்றால் மென்மை என்றே விளக்கங்களும் தருகின்றனர். இதனை,

> **சங்க இலக்கியம் கட்டமைத்துள்ள பெண்மை எனும் கருத்தியல் மிக நுட்பமான அரசியல் செயல்திறத்தைப் பெற்றது, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, கற்புத்திறம், காம உணர்வை வெளியிடுவதில் கட்டுப்பாடு, பெண் பேசும் மொழியின் தன்மை, பெண் சொல்லாடலின் எல்லை. பெண் இயக்கத்தின் நில எல்லை முதலான பண்புகள் கவனத்திற்குரியன. தொல்காப்பியமும் அதன் உரைகளும் எந்தவித சமரசத்திற்கும் இடம்தராத வகையில் மிகக் கறாரான முறையில் (இச்சொல்லாட்சிகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன்) பெண்மைத் தன்மையும் ஆண்மைத் தன்மையும் கட்டமைத்துள்ள திறம் வியப்பிற்குரியது (2010:60)**

எனப் பெண்மைக்கான மென்மை என்ற விளக்கத்தை நா.செல்வராசு குறிப்பிடுகிறார். மேலும் பெண் சார்ந்த பல கோட்பாடுகள் இலக்கியங்களில் புகுத்த ஆராயப்பட்ட போக்கும் கவனிக்கத்தக்கது.

**பெண்மை(ய) விமர்சனம்**

பெண் படைப்பாளிகளின் படைப்பினை எடுத்துக்கொண்டு விமர்சனம் செய்தலே பெண்மை(ய) விமர்சனம் எனப்படுகிறது. இதனை.

**வரலாறு அடிக்கருத்துக்கள், வகைமைகள், அமைப்புகள் முதலானவை பெண்களின் எழுத்துக்களில் எப்படி உள்ளன என ஆய்தனும் பெண்படைப்பாக்கத்தில் உள இயங்கியல் பற்றிப் பேசுதலும் இம்முறை அணுகல்கள். இம்முறையை ஷோவால்ட்டர் பெண்மை(ய) விமர்சனம் பல்வித கோட்பாடுகளைத் தருகின்றது. பெண்களின் எழுத்துக்களை முதன்மை மூலங்களாக ஆய்வுக்கு எடுத்தல் புதிய கருத்து வரைவுகளைத் தருகின்றது *(2007:117)***

*என எதிர்வு சிவக்குமார் குறிப்பிடுகிறார். அதாவது பெண்மை(ய) விமர்சனம் என்பது பெண்ணைப் பற்றியதாகஇருப்பினும் பெண் படைப்பாளிகளின் படைப்புகளில் பெண்ணை விமர்சித்தல் என்கிறார்.*

**கருத்தமைவு**

*கருத்தமைவு என்பது ஒருவர் எதன்மீதாவது தான் கொள்ளும் மதிப்பு அல்லது சிந்தனையை வைத்து அவர் அதன்மீது அத்தகைய கருத்தமைவினைக் கொண்டுள்ளார் என்பதை அவர் வெளிப்படுத்தும் கருத்துகள் வழி நாம் அறியலாம். அதனையே அவருடைய கருத்தமைவு எனலாம். இதனை.*

**புலவர்களின் கருத்துகள் கோட்பாடுகளாக வகுக்கப்படுவதற்கு முன்னுள்ள, தரவுகள் அடிப்படையிலான கருத்து அல்லது கருத்துத் தொகுப்பு கருத்தமைவு *(concept)* எனப் பெயரிடப்படுகிறது. வாழ்வியல் பற்றியும் பெண்பற்றியும் பல புலவர்களின் நுணுக்கமான கருத்தமைவுகள் பல கிடைகின்றன. அவர்கள் பாடிய அகப் பாடல்கள் புறநானூற்றுப் பாடல்கள் ஆகிய இரண்டையும் ஒப்பவைத்து நோக்கும்போதே அவை முழுமையடைகின்றன. *(2016:9)***

*என்று சிவஞானம் கலைமகள் கூறுவதிலிருந்து கருத்தமைவு என்பது ஒருவர் ஒன்றின்மீது கொண்டுள்ள கருத்து அல்லது கருத்துத் தொகுப்பே ஆகும் என்பது அறியமுடிகிறது.*

*பெண் படைப்பாளிகளை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் ஆண் பெண் என இருபாலரின் படைப்புகளில் பெண் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளாள் என்பதிலிருந்து அப்பெண்ணின் பெண்மையும் அப்படைப்பாளியின் பெண்மை பற்றிய கருத்தமைவும் நன்கு விளங்குவதாக அமையும். எனவே படைப்பாளிகளின் படைப்புகளில் உள்ள பெண்மை சார்ந்த தம் கருத்துகளை எவ்வாறு அமைத்துக் கூறியுள்ளார்கள் என்பதை ஆராய்வதே புலவர்களின் பெண்மை பற்றிய கருத்தமைவு ஆகும்.*

**சங்க இலக்கியப் பிரதிகள் சித்தரிக்க விரும்பும் பெண் பற்றிய பிம்பம் முக்கியமானது. அந்தப் பெண்ணின் சமூக மதிப்பீடுகள் யாவை? சமூகத்தில் தொடர்ந்து பெண் பற்றிய புனைவுகளைக் கட்டமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் யாது? பெண்ணைக் குடும்ப நிறுவனத்திற்குள் இணைத்து அவளுடைய ஒவ்வொரு செயற்பாட்டினையும் வரையறுத்திடச் சமூகச் சூழல் முயலுவது**

***ஏன்? பிரிந்துபோன கணவனுக்காகப் பொறுமையுடன் வீட்டில் ஆற்றியிருக்க வேண்டியது பெண்ணின் இயல்பு என்ற போதனையில் பொதிந்துள்ள அரசியல் யாது? இப்படிப் பல கேள்விகள் தோன்றுகின்றன. பெண்ணின் மனவுணர்வுகள், பாலியல் விருப்பம் போன்றவற்றைச் சிதைத்து, அவளை வெறும் உடலாக மாற்றி. ஆணின் மேலாதிக்கத்தினுக்கேற்ப மாற்றும் முயற்சிக்கான தடயங்கள் சங்க இலக்கியத்தில் காணப்பெறுவது ஆழ்ந்த ஆய்விற்குரியது (2011:17).***

*என்று ந.முருகேசபாண்டியன் கூறுவதிலிருந்து இவ்வாய்வின் இன்றியமையாமை , அறியமுடிகிறது.*

*சங்க இலக்கியம் எனும்போது அக்காலத்தில் தோன்றிய இலக்கணத்தையும் நோக்குதல் வேண்டும். தொல்காப்பியம் ஏறக்குறைய அக்காலக்கட்டத்தில் தோன்றியதாகும். எனவே அவ்விலக்கண நூலில் பெண் தொடர்பான செய்திகளை அறிந்துகொள்வதும் இன்றியமையாதாகிறது.*

*சங்க இலக்கியம் என்றாலே அகமும் புறமும் ஆகும். அகம் என்றாலே களவு, கற்பு எனஇருநிலைப்படும். களவில் பெண் என்பவள் எந்த நிலையில் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதைக் குறுந்தொகை பாடல்வழியாகப் புலவர்களின் பெண்மைப் பற்றிய கருத்தமைவு எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதை பின்வருமாறு அறியவோம்.*

***தலைவனைத்தேர்தலில் தெளிவுவேண்டும்***

*பெண்ணுக்குப் புலவர்கள் முதலில் கூறுவது தன் வாழ்வில் துணையாக வரக்கூடிய தலைவனைத் தேர்தலில் தெளிவு வேண்டும் என்கிறார். ஏன் என்பதையும் குறுந்தொகை புலவர் எடுத்துரைக்கின்றனர்.*

***அச்சம் தரவல்ல தலைவன் வேண்டாம்***

*தலைவனின் நாட்டைக் குறிப்பிடும் புலவர் "மலை முழுவதும் மணம் வீசும் காந்தட் பூவின் தாதை ஊதுகின்ற வண்டு. பாம்பினால் உமிழப்படும் மணியைப் போல தோன்றும் நாடு'' என்று கூறுவதிலிருந்துதலைவனைப் பாம்பாகவும் அவனால் கொடுக்கப்பட்ட இக்களவு அச்சத்தைத் தரக்கூடியதாக உள்ளது.அதனால் அச்சம் தரக்கூடிய தலைவன்பால் உண்டான இக்களவுத் துன்பத்தைத் தரக்கூடியது என்கிறார்.இதனை.*

***நறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி***
***பாம்புமிழ் மணியிற் றோன்றும்***
***முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே (குறுந்.239)***

*என்பதிலிருந்து தலைவன் அச்சம் தரவல்லவனாக இருப்பது என்பது நம்மால் அறியமுடிகிறது. மேலும் அத்தகைய களவினால், இழக்கக்கூடியது நாணம் மட்டுமே என்று கூறுகிறார். மேலும்*

***தொடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே***
***விடுநாண் உண்டா தோழி(குறுந்.239)***

*என்று அச்சம் தரக்கூடிய தலைவனோடு கொள்ளும் களவு நாணத்தை இழக்கச் செய்யும் தன்மையுடையது. அதனால்தான் பெண் தலைவனைத் தேர்தல் இன்றியமையாதது ஆகும். அவ்வாறு இல்லையென்றால். அப்பெண்துன்புறுவாள் என்கிறார். அத்துன்பம் களவு நீட்டித்தலினால் மேலும் மிகுதுன்பத்தை உண்டாக்கும். இதனால் தலைவனைத் தேர்ந்தெடுக்கும் அறிவுடையவளாகத் தலைவி இருத்தல் வேண்டும் என்றும் துன்பத்தைத் தரக்கூடிய களவினை நீட்டித்தல் கூடாது என்றும் ஆசிரியர் பெருங்கண்ணனார் கருதுவதைக் காணமுடிகிறது.*

***உறுதியற்ற தலைவன் வேண்டாம்***

*தலைவியின் துன்பத்திற்குத் தலைவனே காரணம் ஆவார். ஆனால் அத்துன்பத்தைக் களைய உறுதியான மனநிலை உள்ள தலைவனைப் பெறவில்லை என்பது அறியமுடிகிறது.*

***வந்தஞர் களைதலை யவராற் றலரே(குறுந்.305)***

*என்று கூறுவதிலிருந்து தலைவியின் துன்பத்தை இயல்பாகப் போக்கும் தன்மையில்லாதவன் தலைவன்என்பது அறியமுடிகிறது. குப்பைக்கோழியாரின் (குறுந்.305) தலைவியோ தோழிக்கு அறத்தோடு நின்று தன் களவினைஎடுத்துரைக்கின்றாள். தலைவரைக் கண்ட கண்கள் அவர்மீது அன்பினை உண்டாக்கின. ஒள்ளிய தீ வருத்தினும் அவரை நோக்கியே அளவளாவுதற்கு அவ்விடம் நோக்கிச் சென்றாலும் அங்கு இல்லை. அதனால் உண்டான இந்நோய் போக்குதற்கு யாருமின்றி கோழி, எப்படி குப்பையோடு தனிமையில் சண்டையிடுமோ அதுபோல தன்னிலை உள்ளதாகக்தோழியிடம் தன் களவினை எடுத்துரைக்கின்றாள்.*

*அதாவது களவில் தானே ஈடுபடுதலால் கவலையைப் போக்குவாரும் இருப்பதில்லை. இதற்குக் காரணம் தலைவியின் துயரை இயல்பாகவே வந்து நீக்கும் தலைவனைப் பெறாமையே ஆகும். எனவே தலைவனைத் தேர்தலில் தெளிவு வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.*

***பகையான நட்பும், உயர்ந்த நட்பும்***

*தலைவனோடு கொண்ட களவு, துன்பத்தைத் தருவதால் அத்தகைய நட்பைப் பகையான நட்பு என்கிறார். தலைவன் முன்பிருந்தது போல் தற்போது இல்லை. அதாவது வரைவு மலியும் முன்புவரை அன்புடையவனாக இருந்தான். ஆனால்*

*வரைவுக்கு உடன்பட்ட பின்னர், வரைவிடை வைத்து சென்ற பிறகு மாறிவிட்டான். இதனை,*

***முன்னாள் இனியதாகிப் பின்னாள்***
***அவர்தினை மேய்தந் தாங்குப்***
***பகையாகின்றவர் நகை விளையாட்டே(குறுந்.394)***

*என்று கூறுகிறார். அதாவது பிடியின் கன்று குறத்தியின் பிள்ளைகளோடு விளையாடியது. முற்காலத்தில் இன்பத்தைத் தந்து பின்னர் துன்பத்தைத் தருதல் போல தலைவனுடன் அன்று கொண்ட நட்பு, இன்று அதுவே பகையாக உள்ளது என்கிறார். தலைவிக்கு இன்பத்தைத் தருவதும் துன்பத்தைத் தருவதும் தலைவனுடன் கொண்ட களவு வாழ்க்கையே காரணம் என்று குறியிறையார் குறிப்பிடுகின்றார்.*

*கனவில் தலைவனைத் தேர்தல் என்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். தலைவன் நல்லவனாகவும் உயர்ந்த குணமுடையவனாகவும் இருத்தல் வேண்டும். மலைப்பக்கத்தில் உள்ள கரிய கொம்புகளை உடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு பெரிய தேனடையை வண்டுகள் செய்தற்கு இடமாகிய நாட்டையுடைய தலைவன் என்பதிலிருந்து அவன் எத்தகைய இனிமையானவன் என்பதைப் புலவர் எடுத்துரைக்கின்றார். அத்தலைவனோடு ஏற்பட்ட இக்களவு வாழ்க்கை என்பது இந்த நிலத்தைவிட பெரியதாகவும் வானத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவும் நீரைக் காட்டிலும் ஆழமானதாகவும் உள்ளது என்று தேவகுலத்தார் குறிப்பிடுகிறார். இத்தகைய தன்மையுடையவனோடு கொண்ட களவு பெண்ணுக்கு உறுதியான இன்பத்தை என்றுமே தரும் என்கிறார். இதனை,*

***நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆரள வின்றே சாரல்***
***கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தேன் இழைக்கு நாடனொடு நட்பே(குறுந்.3)***

*என்று கூறுவதிலிருந்து பெண் நல்ல உயர்ந்த தலைவனைப் பெறுதல் வேண்டும் என்ற கருத்தை உணரமுடிகிறது.*

***நிலையான மனமுடையதலைவனைப் பெறுதல்***

*தலைவனின் மனநிலையில்தான் பெண்ணின் வாழ்வு அமைவதால், மனத்தினை மாற்றும் தன்மை இல்லாத தலைவனைப் பெறுதல் வேண்டும் எனக் கருதுகிறார். அதாவது நிலமே பெயர்த்தாலும் நீரும் தீயாக மாறினாலும் கடலுக்கு எல்லை உண்டானாலும் உருவாகும். ஆனால் தலைவனின் மனம் மாறாது. எத்தகைய கௌவை உண்டாயினும் அதனால் அச்சமுற்றுத் தலைவன் பயந்துவிடமாட்டான். மேலும் களவிலும் வேறுபாடு தோன்றாது. எச்சூழலிலும் மாறாத தலைவனே தலைவியின் துன்பத்தைக் களைய முடியும் என்ற நோக்கம் வலியுறுத்தப்படுவதைக்(குறுந்.373) காணமுடிகிறது. எனவே பெண் , மாறாத மனம்கொண்ட தலைவனைப் பெறுதல் வேண்டும் என்பது அவசியமாகிறது.*

**மடலேறி சான்றோரைத் துணைக்கொள்ளுதல்**

*தலைவியைப் பெறுதல் வேண்டி தலைவன் மடலேறுவேன் என்பான். அவ்வாறு மடலேறி சான்றோரைத் துணைக்கொண்டு தலைவியைப் பெறுவேன் என்பதைப் புலவர் குறிப்பிடுகிறார். மூங்கிலையொத்த தோள்களை உடைய இச்சிறுமகளுக்குப் பாவையைச் செய்து தந்தும் அதற்காகப் பஞ்சாய்க்கோரையைத் தேடிப்பறித்து கொணர்ந்து கொடுத்தும் அவளின் முலைகளுக்குத் தொய்யலை நான் எழுதியதை இவளைப் பாதுகாப்பாரும் அறியார். செங்கோல் ஆட்சி செய்யும் மன்றத்தில் தலைவியை வினவினால் என்னாகும்? இதனை அறியாத இந்த ஊர் அறிவின்மையை உடையது. அத்தகையசான்றோரைத் துணையாகக்கொண்டு மடலேறி தலைவியை அடைவேன் என்பதை,*

**பணைத்தோள் குறுமகள் பாவை தைஇயும்**
**பஞ்சாய்ப் பளைஞ் சூழ்ந்து மற்றிவள்**
**உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய**
**தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்**
**முறையுடையரசன் செங்கோ லவையத்**
**தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்? (குறுந்.276)**

*என்று தலைவன் தலைவியோடு இருந்ததையும் அவளுக்குத் தொய்யில் எழுதினேன் என்று கூறுவதிலிருந்து தலைவியும் அவ்விருப்பத்தில் உள்ளமை அறியமுடிகிறது. எனவே தோழி உடன்படாமையினாலேயே மடலேறுவேன் எனத் தலைவன் கூறுவதிலிருந்து களவுக்கு உடன்படுதல் வேண்டும் என்பதுஉணர்த்தப்படுகிறது.*

*தாய்க்குக் களவினை எடுத்துரைத்தல் தவறன்று*

*தினைக்கதிரை மிதித்து அழிக்கும் யானையைத் தன் அம்பினையும் வில்லையும் கொண்டு விரட்டும்தலைவனும் அத்தினையைக் காக்கும் பொருட்டு கிளியினை ஓட்டும் தலைவியும் கொண்ட களவு வாழ்க்கை குறையாக நிற்றலினால் அதைக் கற்பாக மாற்றவும் அக்களவினால் ஏற்படும் வருத்தத்தை நீக்குவதற்காகவும் தாயிடம் கூறுதல் தவறாகுமா? என வினவுவதின் வழி களவினை ப்பெற்றோருக்கு எடுத்துரைத்தல் தவறன்று என்கிறார். இதனை,*

**பணிக்குறை வருத்தம் வீடத்**
**துணியின் எவனோ தோழிநம் மறையே (குறுந்.333)**

*என்று உழுந்தினைம் புலவனார் கூறுவதிலிருந்து தாயிடம் களவினை எடுத்துரைக்க வேண்டும் எனக்கூறுவதைக் காணலாம்.*

**வரைவுக்கு உடன்படுதல் வேண்டும்.**

*தலைவியின் துன்பத்திற்குக் காரணாம் பிறர் அறியாமல் ஏற்படுத்திக்கொண்ட களவு வாழ்க்கையே ஆகும். அதனால் தமர் அக்களவினை*

*ஏற்றுக்கொண்டால் துன்பம் இல்லை, எனவே களவினைத் தமர் ஏற்றல் வேண்டும் என்கிறார். அவ்வாறு களவினை ஏற்றுக்கொண்டதால் அத்தலைவன் வரைப்பொருள்கண் சென்றுள்ளான். அவ்வரைப்பொருளுடன் வருவான் என அன்னை கூறியதால் அவள் சுவர்க்கத்தையே அடைவாள் என்று வாழ்த்துவதிலிருந்து வரைவுக்கு உடன்பட்டதால் பெண் மகிழ்வதாகப் புலவர் கருதுகிறார். இதனை.*

***அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்***
***பெரும்பெயர் உலகம் பெறிஇயரோ அன்னை***
***தம்மில் தமதுண்டன்ன சினைதொறும்***
***தீம்பழந் தூங்கும் பலவின்***
***ஓங்குமலை நாடனை வரும்என்றாளே (குறுந்.83)***

*என்பதிலிருந்து தமர் வரைவுக்கு உடன்படுதல் வேண்டும் என வெண்பூதனார் கருதுவதைக் காணலாம்.*

***ஊழினாலேயே களவு வாழ்க்கை ஏற்படும் எனல்***

*களவு என்பது ஊழ்வினையின் உந்துதலினாலேயே ஏற்படும் என்கிறார். அவ்வாறு சிறுவயதில் சிறுவர்கள் ஒருவரோடு ஒருவராக விளையாடும் பொழுது வேறுபடும் மனநிலை உடையவராக இருந்தாலும் ஊழ்வினையால் இருவரும் களவில் இணைவர் என்கிறார். தலைவியின் கூந்தலைப் பிடித்து இழுக்கவும், தலைவனின் புல்லிய தலை மயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடவும் அன்புடைய செவிலித்தாயார் இடைமறித்துத் தடுக்கவும் ஒழியாமல் என்றுமே சிறிய சண்டையைப் போடும் இவர்கள் ஊழ்வினையினால் மலரை இணைத்த மாலையைப்போன்று மணம் புரிந்து மகிழும் இயல்பை உண்டாக்கியது என்பதை,*

***காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது***
***ஏதில் சிறுசெரு வுறுப மன்னோ***
***நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்***
***துணைமலர்ப் பிணைய லன்னவிவர்***
***மணமகிழ் இயற்கை காட்டியோயே ( குறுந்.229)***

*என்று கூறுவதிலிருந்து வேறுபடும் இயல்பினராகவே இருந்தாலும் ஊழ்வினையால் இணைவர் என மோதாசனார் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.*

***வினவ அஞ்சுதல் கூடாது***

*தலைவனது வரவினால் இன்பம் உண்டாயினும் வழியில் ஏற்படும் துன்பத்தை நினைத்து அச்சமும் ஏற்படுகிறது. வரவில்லையாயின் அச்சம் இல்லை. ஆனால் தலைவனைக் காணாத பொழுது துன்பம் ஏற்படுகிறது என்ற இருநிலைகளிலும் தலைவி துன்பம் அடைகின்றாள். இரவுக்குறியின்கண் வந்து செல்லும் தலைவன் தலைவியை முயங்கிச் செல்லும்போது செல்கின்றீரோ? என்று வினவவும் சென்றால் எப்பொழுது வருவீர்? என்று வினவவும் அஞ்சுகின்ற*

*பெண்ணாகக் கருவூர் சேரமான் சாத்தனார் குறிப்பிடுகின்றார். அதாவது கட்டுப்பாட்டுக்குள் பெண் வாழ்வதால் தனக்கான உணர்வுடைய வினாவையும் தன்னால் கேட்டறிய முடியாத பெண்மை கண்டு வருந்துகின்றாள். மாறாக அவள் வினவியிருந்தால் தனக்கான தெளிவும் பயமின்றி வாழும் வாழ்க்கையும் பெற்றிருப்பாள். அதனால் வினவுதல் வேண்டும் என்கிறார். இதனை,*

***சேறிரோ எனச் செப்பலும் ஆற்றாம்***
***வருவி ரோ என வினவலும் வினவாம்***
***யாங்கு செய்வாங்கொல் தோழி (குறுந். 268)***

*என்று குறிப்பிடுவதன்வழிக் கருவூர் சேரமான் சாத்தனார் பெண் என்பவள் தனக்கான விவரத்தைக் கேட்பதன்வழி தெளிவடைவாள் என்கிறார்.*

**ஆயம் அலர் அச்சம்**

*தலைவனின் வருகையை ஆயத்தார் கண்டதனால் அலர் எழுந்தது. உயர்ந்த வெள்ளிய மணலினிடத்துத் தாழ்ந்து வளர்ந்த புன்னை மரத்தினது மலர்களைப் பறிக்கும் ஆயத்தினர் தலைவன் வரும் தேரைத் தலைவி கண்டாலோ இல்லையோ அவர்கள் கண்டனர். அதனால் தலைவியின் களவு வெளிப்பட்டவுடன் அலர் தூற்றுகின்றனர். அதனால் தலைவி துன்புறுவதால் வரைவு வலியுறுத்துகிறார். இதனை.*

***அலர்யாங் கொழிவ தோழி பெருங்கடற்***
***புலவுநா றகன்றுறை வலவன் ராங்கவும்***
***நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்***
***யான்கண் டனனோ விலனோ பானாள்***
***ஓங்கல் வெண்மணத் றாழ்ந்த புன்னைத்***
***தாதுசேர் நிகர்மலர் கொய்யும்***
***ஆயமெல்லா முடன்கண் டன்றே (குறுந்.311)***

*என்று கூறுவதிலிருந்து அலரினால் பெண் அஞ்சுவதை நீக்க, வரைதல் வேண்டும் எனக் கூறுவதைக்காணமுடிகிறது,*

**பெண்ணலம் இழக்கும் களவு வேண்டாம்**

*களவில் தலைவி துன்புறுதனுக்குக் காரணம் தலைவனோடு இழந்த அந்த பெண்ணலமே. ஏனென்றால் அவ்வாறு இழந்த பெண் வரைதல் வேண்டும். வரைவு நீட்டிப்பதால் அது துன்பத்தை மிகுவிக்கும். ஒரு நாள் பெரிய ஊரினர் மேற்கொண்ட மிக்க ஆரவாரத்தை உடைய விழாவிற்குப் போவோம் என்றாய். அப்பொழுது நல்ல வாய்ச்சொற்களாகிய நிமித்தங்கள் பல இருந்தன. ஆனால் அந்த நல்லநிமித்தங்கள் தாய் காத்த பெண்மை நலம் இழந்தது என்கிறார்.*

*கிளிகடி கருவிகளாகிய தழலையும் தட்டையையும் தழையையும் எனக்குக் கொடுத்த தலைவன், என்தாய் பாதுகாத்த பெண்மை நலத்தை எடுத்துக்கொண்டான் என வருந்துவதை,*

***தழனும் தட்டையும் முறியுந் தந்திவை***
***ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி***
***அன்னை யோம்பிய ஆய்நலம் என்னை***
***கொண்டான் யாம் இன்னமாலினியே (குறுந்.223)***

*என்று கூறுவதிலிருந்து திருவிழாவின்போது பெண் தன் தாய் காத்த நலம் இழந்தமை எடுத்துரைக்கப்படுகிறது. எனவே தாய் தந்தையர் அறியா வகையில் களவு மேற்கொண்டால் துன்பம் நேரிடும்என்கிறார். இதன்வழி களவினை வேண்டாம் என்று மதுரை கடையத்தார் மகனார் வெண்ணாகனார்கருதுகிறார்.*

**எடுத்துரைக்கும் உரிமை**

*பெண், தலைவனைச் சார்ந்தவளாகவே இருப்பதினால், தலைவனின்றி வாழ்தலை விரும்பமாட்டாள். எனவே தலைவனைப் பிரியும்போதும் பிரிந்திருக்கும் சூழலிலும் துன்பமடைகின்றாள். அத்துன்பத்தின் நிலையினைத் தலைவி மட்டுமே முழுமையாக உணர்வதால், அவளாகவே அத்துன்பத்தை எடுத்துரைத்தல் வேண்டும் என மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன் கருதுகிறார். இதனை,*

***வந்த வாடைச் சிலயெற் கடைநாள்***
***நோய்நீந் தரும்படர் தீர நீ நயந்து***
***கூறின் எவனோ தோழி... (குறுந்.332)***

*என்று கூறுவதிலிருந்து மலையையுடைய தலைவனுக்கு வாடைவந்த கடையாமத்தில் வருத்தத்திலே துன்பத்தைத் தீர்த்தல் பொருட்டாகப் பெண் எடுத்துரைத்தல் வேண்டும் என்கிறார். அதாவது தன் துன்பத்தைத் தானே எடுத்துரைத்தல் தவறன்று என்பதை, பெண் தன் துன்பத்தைத் தானே எடுத்துரைக்கும் பெற்றவளாக இருக்கவேண்டும் என்கிறார். இதற்கு மாறாக எடுத்துரைத்தல் கூடாது என்ற புலவரின் பதிவும் குறுந்தொகை பாடல்களின்வழி அறியமுடிகிறது.*

**எடுத்துரைத்தல் கூடாது**

*தலைவனால் இந்நிலையை அடைந்தேன் என்று கூறினால் அது தன் பெண்மையை இழந்தநிலையைக் காட்டிலும் துன்பத்தைத் தரக்கூடியது என்பதினால் தன் தயரை எடுத்துரைத்தல் கூடாது என்கிறார். இதைமாலை மாறனார்,*

***கடலங் கான லாய மாய்ந்தவென்***
***நலமிழந் ததனினும் நனியின் னாதே***

***வாள்போல வாய் கொழுமடல் தாழை***
***மாலைவேல் நாட்டு வேலி யாகும்***
***மெல்லம் புலம்பன் கொடுமை***
***பல்லோர் அறியப் பரந்துவெளிப் படினே (குறுந்.245)***

*என்று பாடி, தலைவி தன் கொடுமை எடுத்துரைத்தல் கூடாது என்கிறார்.*

**உடன்போக்கு செல்லுதல் தவிர்த்தல்/பெற்றோர் ஏற்றல் நலம்**

*உடன்போக்குச் செல்லும் காதலர் மட்டுமின்றி பெற்றோரும் வருந்துவர் என்பதை மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார் (குறுந்.144) குறிப்பிடுகின்றார். தலைவி கழியிடத்து மலர்ந்த காவிமலர்களைப் பறித்தும் கடவிலுள்ள வெள்ளிய தலையையுடைய அலையின்கண் விளையாடியும் எப்பொழுதும் தன்னோடு என்றும் நீங்காத தோழியருடன் விளையாடுதலுக்கு உடன்படாமல் மேகங்கள் தவழ்கின்ற உச்சியையுடைய வானத்தளவும் உயர்ந்த மலைநாட்டுத் தலைவனுடன் பாலைநிலத்தில் பருக்கைக்கற்கள் தலைவியின் காலின் அழகைச் சிதைக்கும் வகையில் உடன்போக்குச் சென்றாளே என்று பெற்றோரும் வருந்துவதினால் தலைவனும் தலைவியும் உடன்போக்குச் செல்லுதல் வேண்டாம் என்றும் களவினை ஏற்றல் நலம் என்றும் புலவர் கருதுவதும் கவனிக்க வேண்டியவை.*

**தொகுப்புரை**

*களவில் தலைவனைத் தேர்ந்தெடுத்தலின் இன்றியமையாமையைக் குறுந்தொகையில் 9 பாடல்களில் எடுத்துரைத்துள்ளனர் . ஏனெனில்தலைவன் நல்லியல்பு உடையவனாக இருப்பின் அப்பெண் எப்பொழுதும் துன்புறுவதில்லை. தம் வாழ்நாள் முழுவதும் இன்பத்தையே பெறுவாள் . எனவே தலைவனைத் தேர்தல் என்பது மிகவும் இன்றியமையாததாகும் , தலைவன் இயல்பிலிருந்து மாறுபட்டவனாக இருந்தால் , அவன் தலைவியை வரைவானோ மாட்பானோ என அச்சத்தினாலேயே வாழ்வதால் , உறங்க முடிவதும் இல்லை . துன்பத்தை ஆற்றியிருக்கவும் முடிவதில்லை . எனவே ஏமாற்றிவிடுவானோ என்ற அச்சத்தினாலேயே பெண் துன்புறுவதாகக் குறுந்தொகை புலவர்கள் கூறுவதும் கவனிக்கத்தக்கது.*

*தலைவன், தலைவியின் பெற்றோரிடத்துத் தங்கள் களவினை எடுத்துரைத்து பெரியோர்களின்அனுமதியுடன் வரைந்து வாழ்தல் வேண்டும் எனப் புலவர்கள் கருதுகின்றனர். அவ்வாறு அனுமதி பெற்ற பின்னர் வரைபொருளுக்காகப் பிரிவு நேரும்போது வருந்தாமல் ஆற்றியிருத்தல் வேண்டுமெனவும் புலவர்கள் கருதுகின்றனர். எனவே களவில் பெண்ணுக்கு ஏற்படும் துன்பங்களுக்குப் பெண்ணே பொறுப்பு எனப் புலவர்களின் பாடல் உணர்த்துகின்றன .அதாவது தலைவன் தேர்வு சரியாக அமைதல் நலம் என்கின்றனர்.*

**துணைநின்ற நூல்கள்**


1. குறுந்தொகை, தி.சௌரி பெருமாள் அரங்கனார் , முதற்பதிப்பு. 1915, வித்யாரத்னாகர அச்சுக்கூடம், வேலூர்.
2. குறுந்தொகை, உவே.சாமிநாதைய்யர். பதிப்பு2000.உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
3. தமிழ்க்காதல், வ.சுப.மாணிக்கம், முதற்பதிப்பு:2002. மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை.
4. கம்பராமாயணம், மூலமும் உரையும் , அ.ச.ஞானசம்பந்தன், பதிப்பு,2014, கங்கை புத்தக நிலையம், சென்னை.
5. சீவகசிந்தாமணி, ஆசிரியர் குழு , மூலமும் உரையும் , பதிப்பு.2015, சாரதா பதிப்பகம், சென்னை.
6. நா.செல்வராசு, சங்க இலக்கியம் :-சமூக மானுடவியல் ஆய்வு , கட்டுரைகள், முதற்பதிப்பு: 2010
7. எதிர்வு சிவக்குமார் - பெண்ணியமும் பிரதிகளும் , காவ்யா சண்முககந்தரம்,பெண்ணியமும் கலை இலக்கிய பிரதிகளும் (கட்டுரை), முதற்பதிப்பு:1994, காவ்யா. சென்னை.
8. சிவஞானம் கலைமகள், நோக்கு இதழ், சனவரி 2016.
9. ந.முருகேசப்பாண்டியன்,அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில் , முதற்பதிப்பு : 2011, காலச்சுவடு பதிப்பகம், சென்னை.
10. தொல்காப்பியம், ச.வே.சுப்பிரமணியன், பதிப்பு. 2003, மணிவாசகர் பதிப்பகம், சென்னை,
11. அன்னித்தாமசு, தமிழக மகளிரியல் , பதிப்பு 2004, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
12. தொல்காப்பியம், இளம்பூரணர் (உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் , கழகவெளியீடு, பதிப்பு, 1953, சென்னை.
13. ந. சுப்புரெட்டியார், இலக்கிய கொள்கை, பதிப்பு: 1981
14. கலித்தொகை, ஆ.விஸ்வநாதன், நியூ செஞ்சுரி புத்தக நிலையம் , பதிப்பு.2004, சென்னை.
15. வேலம்மாள்.நா,பெண்மைய வாதம், முதற்பதிப்பு:2009. காவ்யா, சென்னை,
16. சிவகாமி.ச, காலச்சூழலில் பெண் , முதற்பதிப்பு:1996, மாதவி பதிப்பகம் , சென்னை-14.
17. திலகவதி.க, சங்க கால மகளில் வாழ்வியல் , முதற்பதிப்பு:2001, இறையருள் பதிப்பகம்,திருச்சி.
18. பிரேமா.இரா, பெண்ணியம்-அணுகுமுறைகள், முதற்பதிப்பு:1998, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. 18.
19. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி , இரண்டாம் பதிப்பு : 2008, Cre-A, 17-18, திருவான்மியூர்.
20. திருமகள் அகராதி, முதற்பதிப்பு : 2001. வ.த.இராம சுப்பிரமணியம் திருமகள் நிலையம், சென்னை-17.
21. கழகத் தமிழ் பேரகராதி வெள்ளிவிழா தமிழ்ப் பேரகராதி 2, மறுபதிப்பு: 2005 எஸ். சங்கரலிங்க முதலியார் தமிழ்மண் பதிப்பகம்.
22. தமிழ் மொழி அகராதி , நா. கதிரைவேற்பிள்ளை *Asian Educational Services 31, HauzknsWlhe:NowDelhi. Sixth Eitin 1992),*

23. யாழ்ப்பான அகராதி , மறுப்பதிப்பு : 2005 சந்திரசேகரப் பண்டிதர் &சரவண பிள்ளை,தமிழ்மண் பதிப்பகம், தி. நகர்,
24. தமிழ் லெக்சிகன் -5, பதிப்பு: 1982,சென்னை பல்கலைக் கழகம்.
25. திருக்குறள், மு.வரதராசனார், பதிப்பு: 1997, கழக வெளியீடு, சென்னை.
26. ந.சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள் , பதிப்பு:2008, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை.